நவதர்சிகளின்



# சொந்தச் சுமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
பதிவு இல:
594

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவதர்சிகளின்

# சொந்தச் சுமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தச்சுமைகள்
(7 படைப்பாளிகளின் 25 கவிதைகள்)

வெளியீடு:-
நவதர்சிகள்
கலை–இலக்கிய அமைப்பு
பாண்டிருப்பு
கல்முனை
(இலங்கை)

தொகுப்பு, வடிவமைப்பு, முகப்பு ஓவியம்:-
சசி. மகரிஷி

முதற் பதிப்பு:-
யூன் 1995

அச்சாக்கம்:-
ஆனந்தா அச்சகம்
கல்முனை

விலை:- 47.50

தொடர்புகளுக்கு:-
'சீதாபதி'
பிரதான வீதி
பாண்டிருப்பு
கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ● முதல் தரிசனம்.

"நவதர்சிகள்" – பாண்டிருப்பு கிராமத்தில் உருவாகி இருக்கும், கலை–இலக்கிய அமைப்பு எங்கள் முதற் செயற்பாடு "சொந்தச் சுமைகள்" என்ற இந்த கவிதைத் தொகுப்பு.

இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் எமது அமைப்பிலுள்ள அங்கத்தவர்கள் சிலரின் கவிதைகளாகும்.

இறுகிவரும் நாளாந்த வாழ்வில் ஒரு மனிதனின் மனதில் எழுகின்ற ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள், வேதனைகள்............ஒவ்வொன்றும் ஒவ்வொரு சுமையே. இச்சுமைகள் ஒரு கவிஞனின் மனதை அழக்கும்போது அவைகளை அவன் கவிதைகளாக்கி சுகம்காண முயல்கின்றான். இங்குள்ள கவிதைகள் அத்தகைய சுமைகளே. உலகத்தையே சுமந்து வந்த களைப்பில் இத்தொகுப்பை உங்கள்முன் இறக்கி வைக்கின்றோம்.

கவிஞரும், எழுத்தாளரும், விமசகருமான சண்முகம் சிவலிங்கம் அவர்கள், இத்தொகுதிக்கு முன்னுரை எழுதியிருப்பதையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம். வேலைப்பளுவின் மத்தியிலும் எங்கள் கவிதைகள் பற்றி முன்னுரை வரிகள் தந்த அன்னாருக்கு இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

கல்முனை ஆனந்தா அச்சகத்தார் இல்லையென்றால் ஒரு வேளை இப்புத்தகம் வெளிவராமலும் போயிருக்கக்கூடும். அந்தவகையில் குறுகிய நாட்களுக்குள் அழகாக இதனை அச்சிட்டு வழங்கி ஆனந்தா அச்சகத்தாரே இப்புத்தகம் வெளிவருவதற்கு முக்கியமானவர்களாவர். ஆகவே அச்சக நிர்வாகி திரு. அ. சியானந்த் அவர்களுக்கும் தொழிலாளர் அனைவருக்கும் எமது விஷேட நன்றிகள்.

இவ்வெளியீட்டின் சகல துறைகளிலும் முனைப்புடன் பணிபுரிந்த சிவ-வரதராஜன் அவர்களையும், எமக்கு ஊக்கமளித்த திரு. ரி. தோமாஸ் வில்லியம் அவர்களையும் நன்றியுடன் நினைத்துப் பார்க்கின்றோம்.

இத்தொகுதியிலுள்ள சில கவிதைகளை ஏற்கனவே பிரசுரித்த 'தினகரன்' 'தினமுரசு' 'சரிநிகர்' ஆகிய பத்திரிகைகளும் எமது நன்றிக்குரியவையே.

எங்கள் முதலாவது வெளியீடான "சொந்தச் சுமைகள்" பற்றிய உங்கள் கருத்துக்கள் அனைத்தையும் எதிர்பார்க்கின்றோம்.

நாங்கள் **நவதர்சிகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாம்பலிலிருந்து.........

நவதர்சிகளே நம்புவீர்களா, இன்றிரவு என்னை இதற்காக ஒதுக்கி விட்டேன். வெளிச்சத்தில் வீழும் பூச்சிகளையும் ஒதுக்கிக் கொண்டு, என்பதை ?

நுளம்புத்திரியின் மணம் மூக்கை துளைக்கிறது. அதன் புகைக் கோலம் என் சிந்தனைக் கோலத்தை பிரதிபலிக்கிறது. மதுக்கடைக் குப்போன கவிதையின் வரிகள் நினைவுக்கு வருகின்றன, வெண் நுரை ததும்பும் பொன்னிறபியர் / ........ வீணை ஒலிகளை / புகை வடிவாக கரைய விடுகிறோம் / புகையின் கோலத்தில் என் சிந்தனை யைப் படரவிடுகிறேன்.

நவதர்சிகளாகிய உங்களை நினைக்கையில், எங்கிருந்து தொடங்குவது என்றொரு கேள்வி, அக்னிக் குஞ்சுகளின் பொட்டு ஒளிர்வுகளுக்குள் என்னை புதைக்கின்றேன் நீங்கள் கேள்விப்பட்டிருக்க முடியாத அக்னிக் குஞ்சுகள் எழுபதுகளின் நடுக்கூற்றில் இங்குசில பொந்துகளில் பொரித்தன வெந்து தணிந்ததா காடு? விசனமுடன் பார்த்தோம். பொந்துகளுக்குள் சாம்பல்கள்தான் மிஞ்சியிருந்தன.

புரிகிறதா நவதர்சிகளே!

அக்னிக் குஞ்சுகள் பொந்துகளுக்குள் சாம்பலான இருபது வருடங்களுக்குப்பிறகு நவதர்சிகளாகிய நீங்கள் புறப்பட்டிருக்கின்றீர்கள். நிச்சயமாக அந்தச் சாம்பலிலிருந்து இறக்கைகளை சடசடத்த ஃபீனிக்ஸ்ஸுகள் அல்ல நீங்கள்.

அக்னிக் குஞ்சுகள் சமதர்மத்தையும் சமூகப் புரட்சியையும் கூவி அழைத்தார்கள். அவர்களது கூவல் வெறும் கேரல் கூவல்தான் என்பதை நாங்கள் அப்போது அறியவில்லை. விடியச்சாமத்து வெள்ளி ஒளிர்வுகளின் அருட்டலில், பனிக்குளிரின் உடல் உதறும் விறைப்பிலே வெளிப்பட்ட கூவல் அது.

புரிகிறதா நவதர்சிகளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது இருபது ஆண்டுகளுக்குப்பிறகு நவதர்சிசளாகிய நீங்கள் புறப்படுகையில், விடிந்தும் வெகுநேரமாகிவிட்டது. விடி வெள்ளிகளின் தூரத்துக் கண்சிமிட்டல்களோ, பனிக்காற்றின் சீதள மயக்கமோ இல்லை. பொழுது மையத்துக்கு வந்துவிட்டது. இது வேகாவெயில், பச்சையதார்த்தம். கனவுச் சுமைகளை நீங்கள் அதிக மாக உங்கள் கண்களில் காவமுடியாது. அதிகமாகக் காவமுடியாது என்பதை கவனமாகவே சொல்லுகிறேன், ஒரு கொடிய போரின் மௌனச் சுமைகளோடுதான் நீங்கள் புறப்படுகிறீர்கள்..........

........ சுற்றிவளைப்புக்கள், முகமூடிமனிதர்கள், அச்சம் தரும் இரவுகள், அவதியைக் கொண்டுவரும் விடியல்கள், கட்டாய இராணுவ பயிற்சிக் கவலைகள்; சித்திரவதைகள், தேடப்படுதல், காணாமல் போதல், கடத்தப்படுதல், சமாதானத்துக்கான ஏக்கங்கள், சமாதா னத்தின் மீதான சந்தேகங்கள் இப்படி பல சுமைகள். இவைகள் உங்களது தனிப்பட்ட சுமைகள் அல்ல நம் அனைவருக்கும் சொந்த மாகிபோய்விட்ட நமது சொந்தச் சுமைகள்.

மூக்கை அரிக்கும் நுளம்புத்திரி! சற்றுத் தள்ளிவைத்து விட் டேன். எனினும் இருட்டில் ஒளிரும் அதன் சிவப்பு நிறக்கண்ணில் எனக்கு எப்போதும் ஒரு மாயக்கவர்ச்சி. வெளிச்சத்தில் நெளியும் அதன் புகைக்கோலத்திலும் அதேமாயக்கவர்ச்சி. அவை என் சிந்த னைக் கோலத்தை செய்துகாட்டுவதாய் ஒரு திருப்தி. ஒரு சிகரட் புகைத்து வீணை ஒலிகளை புகைவடிவாக கரையவிடுவதிலும் ஒரு திடீர் நாட்டம்.

சுமைகள் உங்களுக்கு கவிதைகளாகியிருக்கின்றன, சில ருக்கு கவிதைகளே சுமைகளாகிவிடும் காலத்தில் - இது என்னுடைய குரல் அல்ல. என்னுடைய மிடறுக்குள் ஏறிவிட்ட ஒரு தமிழ் நாட் டின் கோழித்தீன் காரனின் குரல். கோழித்தீனை சரிக்கட்டுவதைப் போல் தமிழ் நாட்டில் ஜனரஞ்சக கவிதைத் தீனியும் சரிக்கட்டுகிறார் கள். அந்தக் கவிதைத் தீனியும் உங்களில் சிலரில் கலந்து போயுள்ளது.

உங்களில் ஒருவரான செ. திவாகரனின் இந்தவரிகளை கவ னியுங்கள்

ஓ... என்பிரியத்தின் ப்ரியமே
உன் மௌனங்கள்
எனக்கு ஶ்ரீ ராகங்கள்
அந்த
இதழ்களின் இளம் சிவப்பில்
நான் யுகம் தோறும்
தபசிருப்பேன்

இதுதான் தமிழ்நாட்டின் கோழித்தீன் காரனின் கவிதை மாக்கோலம்போல வார்த்தைகளினால் வர்ணக் கோலமிடுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. சியானந்தின் இந்த வரிகளையும் கவனியுங்கள்

ஒரு பருவில்
உன் முழு முகமே
மறைந்து போகும்

ஒரு சின்னப் பீத்தலில்
உன் உடல் முழுதுமே
தெரிவதாய்த் தெரியும்

சியானந்தின் இந்த வரிகளை ரசிக்கலாம் ஆனால் முன் சொன்ன அதேபாணியை இது பிரதிபலிப்பதுபோல் இல்லையா?

இவைகள்தான் நான் சற்றுமுன் குறிப்பிட்ட கனவுச்சுமைகள். அ. குமணனின் பாஷையில் சொன்னால் "ஞாபகங் கொள்" நான் சொன்ன வரிகளை புரட்டிப்பார். "கனவுச் சுமைகளை நீங்கள் அதிகமாக காவமுடியாது" சிறிது காவுகிறீர்கள் இந்த வேகா வெயி லில் நாம் ஒரு நெருப்பாற்றைக் கடந்துகொண்டிக்ருகின்றோம் என்பது உண்மைதான். ஆனால் நெருப்புக்குள்ளும் நீர்ச்சுனைகளை காட்டுவதுதான் வாழ்க்கை. கல் இடுக்குகளிலும் புல்முளைக்கும் போரின் மத்தியிலும் காதல் பூக்கும் இந்த யதார்த்தத்திற்கும் நாம் இசைந்தேயாகவேண்டும். செ. திவாகரனின் மென்மொட்டு உணர்வுகள் 'குறிக்கோளை மறக்காத' சியானந்தின் குறும்புப் பேச்சுக்கள், "ஒவ்வொரு இரவும் கட்டியணைக்கும்" எஸ். எஸ். ராஜனின் கனாப் படங்கள் விட்டு விட்ட அவளை விட்டுவிடத் துணியும் அ. குமணனின் காதல் விரக்தி முதலிய கனவுச் சுமைகளெல்லாம் எந்தக் கொடிய போரின் யதார்த்தமும் இடந்தரக்கூடிய வாழ்க்கை யதார்த்தமே என்பதை ஒப்புக்கொண்டு, தமிழ் நாட்டின் ஜனரஞ்சகத் தீனிக்கு மீண்டும் திரும்புவோம்.

எஸ். எஸ். ராஜனின் இந்தவரிகளை சற்றுக் கவனியுங்கள்

I. கைத்தலம் பற்ற
………… …………
உன்தலம் சேர — (பக் – 25)

II. வேலையின் வேளையில் — (பக் – 25)

III. மடிந்து விழுந்தால்
மடிதாங்கும் வரை
………… …… நினை — (பக் – 28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV. இன்பங்களின் தரிப்பிடம்
இல்லங்களின் இருப்பிடம் — (பக் - 30)

V. புலன் விசாரணை
புலன்களுக்கு விடைகொடுத்ததால் — (பக் - 32)

நவதர்சிகளே! நான் இந்தவரிகளை கவனமாகத் துருவி இருப்பதன் காரணமென்ன? இவை எஸ். எஸ். ராஜனின் பலத்தையும் காட்டும், பலவீனத்தையும் காட்டும். இது சொல்விளையாட்டு சொற்சிலம்பம் — சொல்வித்தை, இந்தச் சொல்வித்தை நவதர்சிகளாகிய உங்களது நவகவிதைக்கு எந்த அளவில் இறக்கையாகும்? சிந்தியுங்கள்.

சிவ-வரதராஜனின் இந்த வரிகளை நோக்குங்கள்.

மனசின் மூலையில்
ஏக்கங்கள் ஒன்றித்து
ஒரு ஆத்ம விடிவுக்காய்
தீக்குளித்து கொள்கின்றன

அல்லது அ. குமணனின் இந்த வரிகளை நோக்குங்கள்.

மனித அலறல்களால்
மென்மை விழிகளுக்குள்
கோரக் கனவுகளை
கொட்டும் ராத்திரி

இவைபோன்ற கவிதைகளைப்பற்றி நான் சிவ-வரதராஜனிடம் நிறைய விவாதித்திருக்கின்றேன். தலையைச் சுற்றி மூக்கைத் தொடவேண்டிய தில்லையே என்பது எனது விவாதம் கவிதை என்பது அப்படித்தான் என்பது அவருடைய விவாதம். இந்த விவாதத்தில் அவர் தனியாக இல்லை. தமிழ்நாட்டின் கோழித்தீன் கடைக்காரர் மட்டுமல்லாது சில காரத்தீனிக்காரர்கள் கூட தலையைச் சுற்றுவது தான் கவிதை என்று சாதிக்கிறார்கள்.

ஆனால் நவதர்சிகளே! நவீன கவிதை என்பது சாதாரண சொற்களைக் கொண்ட நேரடி அமைப்பு என்பதை நீங்களே இங்கு நிரூபித்திருக்கிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ- வரதராஜனின் 'வாழ்ந்து வருகிறோம்' நேரடித் தன்மை மிக்க ஒரு நல்ல கவிதை அ. குமணனின் 'விட்டு விட்ட அவளை விட்டு' என்பது நேரடித்தன்மையும் படிமவீச்சுகளும் கொண்ட ஒரு முழுமையான கவிதை, எஸ். எஸ் ராஜனின் 'நினைவுகள்' இடையில் சற்று தொய்வு கண்டபோதும் எளிமையின் சுவடுகளில் செல்கிறது. வீ. கமலினியின் 'எல்லைகளில் எதுவும் இல்லை' 'நீயும் நானும்' சசி மகரிஷியின் 'ஒற்றை நட்சத்திரம்' 'போய் வருகிறேன்' முதலியவை சொற்களின் பிரச்சனையின்றி பொருளின் வலிமையில் நம்மை கொண்டு செல்பவை.

ஆனால் எளிமையான சொற்களை நேரடித்தன்மை மிக்கதான கவிதைகளில் கையாளுதல் கத்தியின் விளிம்பில் நடப்பது போன்றதாகும். எளிமையான சொற்களுக்கு வலுவைக் கொடுப்பது கவிதையின் இறுக்கமான அமைப்பே. சசி-மகரிஷியின் கவிதைகள் விரைவான படிமங்களினூடு கவிதையை நகர்த்துகின்ற பொருளமைப்பை கொண்டிருந்தாலும் பொதுவாக எல்லாக்கவிதைகளிலும் ஒரே ஓர் இடத்தில் தொய்வு தலைதூக்குகிறது. அதேபோல கவிதைகள் வட்ட வடிவ அமைப்பினுள் இயங்கினாலும் ஒற்றை நட்சத்திரம் என்ற கவிதையைத் தவிர்ந்த ஏனைய கவிதைகள் வட்டவடிவ அமைப்பையும் மீறி ஒரு முத்தாய்ப்பு (FINISH) இன்றி சரிந்த, குலைந்த தன்மையைக் காட்டுகின்றன. கவிதையின் இறுதி ஆச்சரியப்படத்தக்க அளவில் முத்தாய்ப்பு பெற்ற கவிதைகளாக வீ. கமலினியின் முன் குறிப்பிட்ட கவிதைகளைக் குறிப்பிடலாம். ''எல்லைகளில் எதுவுமில்லை'' என்ற கவிதையில்

என் கண்களுக்குள்
ஏதோ ஒன்று
ஊர்ந்து செல்கிறது.

என்ற இறுதி வரிகள் கண்களை மூடிய நிலையில் நட்சத்திர மண்டலத்துக்குள் நம்மைச்சேர்த்து, குழந்தைப் பருவமிருந்து நமக்குள் குடிகொண்டிருக்கும் நட்சத்திர அனுபவங்களை மீட்டுகிறது. அதேபோல 'நீயும் நானும்' இல்வரும் இறுதி வரிகள் அதிர்ச்சியுடன் கூடிய புதியபல அர்த்தபரிமானங்களை விஸ்தரிக்க உதவுகின்றன.

ஆனால் ஒரு கேள்வி. 1994ல் மேற்குறித்த இரண்டு கவிதைகளையும் எழுதிய அதே வீ. கமலினிதானா அதே1994ல் மனைவிக்கு ஒரு மடல் எழுதினார்? நம்பமுடியவில்லை.

நல்லது நவதர்சிகளே! எனது நுளம்புத்திரியில் பாதிமுடிந்துவிட்டது. நீண்டு மெலியும் புகைக்கோலமும் குறைந்துவிட்டது. அறையில் காற்றோட்டமும் குறைந்துவிட்ட தென்றல்லவா அர்த்தம் எனது உற்சாகம்மட்டும் குறையாமலிருக்குமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிய இடத்துக்கே மீண்டும் வருவது எனது இயல்பு அது முழுமையின் அடையாளம் மட்டுமல்ல அதன் பூர்த்தியுமாகும்.

நான் தொடங்கிய இடமெது? என்னை ஒதுக்கியதா? பூச்சிகளை ஒதுக்கியதா? நுளம்புத் திரியா? சிகரட் புகையா?

நான் நினைக்கின்றேன் எனது தொடக்கம் அக்னிக் குஞ்சுகள்தான். அக்னிக் குஞ்சுகளிலிருந்து நவதர்சிகளாகிய உங்கள்வரை ஒரு நீண்ட இருபது ஆண்டுகளின் சூன்யம் — சாம்பல்.

உங்களிலிருந்து இந்தப்பயணம் தொடங்குகிறது. விரைவில் போர்முடிந்து சமாதானம் பிறக்குமென பிரார்த்திப்போம். அப்போது இந்த மௌனச்சுமைகளுக்கும் அப்பால் உங்கள் பயணம் தொடரும் இந்த மௌனச்சுமைகளுக்கும் அப்பால் உள்ள வாழ்க்கை விசாலங்களை நீங்கள் தரிசிப்பீர்கள். மீண்டும் ஒரு விடிவெள்ளி தோன்றும் வரை நீங்கள் நடப்பீர்கள். அப்போது புதிய அக்னிக் குஞ்சுகள் பொரிக்கப்படக் கூடும் ஒருவேளை பழைய சாம்பலில் இருந்து புதிய ஃபீனிக்ஸ்களுகள் சடசடத்து சிறகடிக்குமோ என்னமோ?

**சண்முகம் சிவலிங்கம்.**

'பிரகஸ்த்தம்'
**பாண்டிருப்பு.**
***02–06–1995.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]
[illegible]
[illegible]-06-1995.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ● சுமைகள்

01—07 சிவ. வரதராஜன்.

சசி. மகரிஷி. 08—17

18—24 அ. குமணன்.

எஸ். எஸ். ராஜன். 25—34

35—37 வீ. கமலினி.

செ. திவாகரன். 38—40

42—45 அ. சியானந்த்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்ந்து வருகிறோம்!

சிவ - வரதராஜன்
*1993*

தேசம் இருண்டுகிடக்கிறது
தெருக்களிலெல்லாம்
காக்கி உருவங்களும்
கவச ஊர்திகளும்
நகர்ந்து செல்கின்றன

விடிந்தால் விசாரிப்புகளுடன்
அவர்கள்
வீடு வருவார்கள்
என்னைப் பற்றி
அம்மா சொன்னாலும்
கேட்க மாட்டார்கள்
அடையாள அட்டை
சொல்வதைத் தவிர

பின் அழைத்துச்சென்று
ஆலமர நிழலில்
அமரச் செய்வார்கள்

சாக்குக்கள் போர்த்திய
முக மூடி மனிதர்களை கொண்டு வருவார்கள்

இனி
முக மூடி மனிதர்களின்
தலையசைவுகளில்தான்
எங்கள்
தலைவிதிகள்

□ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜம்

சிவ - வரதராஜன்
1993

உஷ்ணகாலத்து
வெப்பக் குளியலில்
வெந்து வெந்து
வியர்வை சிந்து

பின்
உக்கிச் சிதைந்த
ஓலைக் குடிசைக்குள்
ஒய்யாரமாய்
ஓய்ந்து படு

ஆயினும்
ஊர்மூலையிலோ !
அம்மன் கோயில் வீதிகளிலோ !
எங்கேயோ எப்படியோ !
துப்பாக்கிச் சனியனின்
துரோக வேட்டுக்கள்
நிச்சயம் நிச்சயம்

ஆம்
நாளை நாமும்
ரவைகள் ருசித்த
எச்சில்களாய்
வீதியோரங்களில் வீசப்படலாம்

குரைப்பு மொழிகளில்
குரோதம் கொட்டும்
நாய்களின் நாவுக்கும்
நற்சுவையாகலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் தோழா
எம் தோள்களில் துயிலும்
பிஞ்சுக் குழந்தைகள்
''செல்''காலம் செதுக்கிய
பொற்கால வீரர்கள்

ம்...
இன்னும்
எத்தனை நாட்களுக்கு
மரண பீதிகளோடு – நாம்
ஓலைக் குடிசைகளுக்குள்
ஒடுங்கிக் கிடப்பது

□ □

*தினகரன் 1994 ஆகஸ்ட் 14*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுள்ளே ஏதேதோ !

சிவ - வரதராஜன்
*1995*

மனசின் மூலையில்
ஏக்கங்கள் ஒன்றித்து
ஒரு ஆத்ம விடிவுக்காய்
தீக்குளித்துக் கொள்கின்றன

பூரிப்புகளை புசித்துவிட்டு
இன்னும் இன்னும்
உமிழ் நீர் சுரக்க
நாவுகளை தொங்கவிட்டபடி
அந்த நினைவுகள்
வருகின்றன

சப்தம் கேட்கவில்லை !
செவிப்பறை உடயவில்லை !
ஆயினும்
செல்விழுந்து சிதறிப்போன
மனித உடல்களைப்போல்
கனாக்களெல்லாம்
இரவின் தெருக்களில்
மடிந்து கிடக்கின்றன

அவள் மட்டும் அங்கே
அலட்சியங்களோடு

இங்கே
மனசின் மூலையில்
ஏக்கங்கள் ஒன்றித்து
ஒரு ஆத்ம விடிவுக்காய்
தீக்குளித்துக் கொள்கின்றன

□ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதைவுகளிடம் கேட்டபோது!

சிவ - வரதராஜன்
*1995*

*அவர்கள்—ஏன்*
*அழுகிறார்கள்.*

*ரவைகளின் நாவுகளுக்கு*
*தேகங்களை*
*ருசிக்கக் கொடுத்த*
*உறவுகளை எண்ணியோ!*

*விடியல் விரோதப்பட்டுக் கொண்ட*
*மனிதர்கள்*
*என்பதாலோ!*

*இனவாதம் தத்தெடுத்த*
*தலைவிதியைக் கொண்டதாலோ!*

*இல்லை*
*நாளைய நாளைகளில்*
*பேதங்களை நீறாக்கப்போகும்*
*''அக்கினி'' யாகத்திற்கு*
*விழி நீர்த்துளிகொண்டு*
*''அவி'' சொரியவோ!*

□ □

*தினகரன் 1995 பெப்ருவரி 19*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு யுத்த விடுமுறையில்...

சிவ - வரதராஜன்
1995

''கள்ளிப் பச்சை'' நிற
கடமை உடை அணிந்தவர்கள்
இப்பொழுதெல்லாம்
உருட்டல் மிரட்டலுடன்
ஊருக்குள் நுளைவதில்லை.

அன்றைய இராக்களைப்போல்
தேகத்தை துளைத்து
உயிர் தேடிக் குடிக்க
செம்புத் தகடுகள் போர்த்திய
ஈயக் குண்டுகள்
துப்பாக்கி முனையிலிருந்து
அகோரமாய் துள்ளி
அமைதி துடைப்பதும்,

உறவுகள் மடிய
ஓலங்கள் ஓங்கி
காதுகளில் கனப்பதும்
இப்பொழுது எங்கள்
ராவுகளில் இல்லை

அந்திப் பொழுதணிந்த
ஆறு மணிக்குப் பின்பும்
மின்சார நிலாக்களின்
மங்கிய ஒளிகளில்
தெருக்கள் நீண்டுகிடக்க,
வாலிபத்துக்கு புதியவர்கள் கூட
வகை, தொகையற்றுத் திரிகின்ற
இந்தப் பிரிய நாட்களில்
நண்பா உன்னை
நினைத்துப் பார்க்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்த கால நெருக்குதலில்
நீ காணாமல் போகுமுன்பு

சிவராத்திரி என்றால்
சில்வர் தட்டில்
கோயில் பிரசாதம்
சேர்ந்து உண்பதும்

கடற்கரை மணலில்
கட்டிப் பிடித்து
கராத்தை அடிப்பதும்

கெற்றப் புள்ளும்
கூழாங்கல்லும் கொண்டு
''குக்குறுப்பச்சான்'' குருவியடித்து
ருசித்துப் புசித்ததும்
என் நினைவுக்கு வருகின்றன

இந்த யுத்த விடுமுறையே
நிரந்தரமாகி எங்கள்
நிர்க்கதி போக்கலாம்
ஆயினும் தோழா!
நானும் நீயும்
சேர்வோம் என்பது
?......

□ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு செவ்வாய் இரவு

சசி. மகரிஷி
*1989*

கனரக வாகன ஓசை
காற்றோடு கலந்து
கரைந்து போனது.
எங்கோ தூரத்தில்
நாய்கள் குரைத்து ஓய்ந்தது

ஏ கே யோடு
எஸ் எல் ஆரும் கதற
இரவின் மௌனம் கலைந்தது.

இந்திய இராணுவ
ட்ரக் வண்டிகளின்
கட கட லொட லொட
காதை அடைக்கையில்
எங்கள் நாயும் குரைக்கிறது.

இந்த இருளிலும்
அந்த தெருவிளக்கின்
அப்பாலுள்ள இருளிலும்
என்ன நடக்கிறது ..?

இரவுகளில்தான் எத்தனையோ
இரகசியங்கள் இருக்கின்றன
விடியலில் சில புரிகின்றன
புரியாமலும் சில போகின்றன.

இதயப் பட படப்பில்
இமைகள் மூட மறந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமக்காலையின்
மேடுகளும்
வெண்நிறமான சிலுவைகளும்
ஏன் தெரிகின்றன ?

இறந்தோர் வந்து
வாழ்வோரோடு கைகோர்த்து
ஏன்
ஆலயத்திற்குப் போகிறார்கள் ?

திறந்த கண்களுக்குள்
இவை ஏன்
தோன்றி மறைந்தன ?

□ □

*தினகரன் 1992 டிசம்பர் 27.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றை நட்சத்திரம்

சசி. மகரிஷி
*1989*

அவனைப் போல
அசைவற்றுப் போன
கோணல் புளியின்
வளைந்த கொப்புகளினூடே
கரிய வானில்
தனியாய்
ஒரு நட்சத்திரம்.

ஊனமுற்ற இவன் நெஞ்சில்
உறங்கி இருந்த நினைவுகள்
கண் சிமிட்டின.

எத்தனை நாளைக்குத்தான்
இப்படி
புரியாத பாஷை பேசும்
இவர்கள் மத்தியில்
ஊமையாய்
முன்னுள்ள ''ரெஸ்ட்ஹவுசின்''
ஊதா நிற
போகன் விலாக்களையும்,
கொய்யாக்களையும்
இந்த முள் வேலியையும்
அந்த கிறவல் திட்டையும்
பார்த்து...... பார்த்து
குவாட்டஸ் கட்டில்
குந்திய படி.....
எப்போதுதான்
ஊருக்கு போவது !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்பாத்து கால்களின்
சர சரப்பும்
நாய்களின் குரைப்பும்

இடை இடையே
விண்ணைப் பிளக்கும்
வெடியோசையும்
கேட்காத ஊராய்
என் ஊர் எப்போது மாறும்.

அப்பா அம்மாவோடும்
அண்ணன் தம்பிகளோடும்
சொந்த வீட்டுக்குள்
சுதந்திரமாக
சுவாசிக்கும் காலம்
இனி எப்போ

அடையாள அட்டையின்றி
ஊருக்குள்ளாவது உலாவுவதற்கு
உரிமை வருமா ?

சுற்றிச் சுற்றி வளைக்கும்
நினைவே இல்லாமல்
அங்கு
தூங்கி எழ முடியுமா ?

என் பழைய ஊர்
முடிவிலி தூரத்தில்
சிறு புள்ளியாய்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை விட
இப்போது தோன்றியுள்ள
சொந்தங்களையே
துரத்திப் பிடிக்கின்ற
துர்ப்பாக்கிய நிலை
எப்போது மறையும்.

அந்த
நட்சத்திரத்தைப் போல
இவனும்
எங்கோவொரு தொலை தூரத்தில்
வரண்ட காற்றை
சுவாசித்த வண்ணம்.....

வானில் நட்சத்திரங்கள்
நிரந்தரமானவையா ?
காலப்போக்கில் அவை
நிர்மூலமாகுமா ?

கரிய வானில்
தனியாய்
இந்த நட்சத்திரம்
இன்னும்
கண் சிமிட்டிக் கொண்டே
இருக்கிறது

□ □

*தினகரன் 1993 பெப்ரவரி 14.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதனைச் சுவடுகள்

சசி. மகரிஷி
*1991*

வெள்ளை அலரியும்
சிதைந்த கட்டடமும்
நீலக் கடலலையும்
இல்லாத இடமிருந்தால் சொல்லுங்கள்.

வெள்ளை அலரிகளை
நான் வெறுக்கிறேன்.
ஏனென்றால்
அந்த அலரிகளின் கீழேதான்

என்னை நிர்வாணமாக்கினார்கள்.
என் கைகளைக் கட்டினார்கள்
கால்களையும் கட்டினார்கள்.

மல்லாக்க தள்ளிவிட்டு
நெஞ்சில்
ஏறி உதைத்தார்கள்.
குப்புறப் போட்டு
குதியில்
பொல்லால் அடித்தார்கள்.

அந்த அலரி மரமொன்றில் தான்
என்னை தொங்க விட்டு,
என்வாயில் நுரை வரும்வரை
சுற்றி நின்று குத்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு மயக்கம் வர
கயிறறுத்து
தொப்பென விழவைத்தார்கள்.

கூரை கழன்று
சிதைந்த கட்டடங்களையும்
செங்கல் தூளும் ஓட்டுத் துண்டுகளும்
சேர்ந்து கிடக்கும் தரைகளையும்
என் கண்கள் காண மறுக்கும்

ஏனென்றால்
அந்த சிதைந்த கட்டடத்துள்த்தான்
என் உறுதியான பற்களை
உடைத்து தூளாக்கினார்கள்
என் கறுத்த உதடுகளை
சிதைத்து சிவப்பாக்கினார்கள்

நேற்றுவரை எனக்கு
நிம்மதி தந்த நீலக்கடலையும்
நெஞ்சம் இனி மறக்கும்,

அந்த கடலின் அலைகள்தான்
அம்மாவின் செவிகளுக்கு எட்டாதபடி
என் சத்தத்திற்கு சமாதி கட்டின
இல்லையென்றால்
அ...ம்...மா... அம்......மா...
என்ற என் அலறல்
அண்டமெல்லாம் கேட்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்
நான் வெறுக்கும்
வெள்ளை அலரியும்
சிதைந்த கட்டடமும்
நீலக் கடலலையும்
இல்லாத இடமொன்றிருந்தால்
சொல்லுங்கள்.

□ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போய் - வருகிறேன்

சசி. மகரிஷி
1991

என் விலங்கை
கழற்றி விட்டார்கள்
நான் போக வேண்டும்

ஆனால் திரும்பவும்
நான் வரலாம்
அடம்பன் கொடி படர்ந்த மண்ணில்
இரத்தக் காயங்களுடன்
அனுங்கியபடி மீண்டும்
வீங்கிய உடல்கள் அசையலாம்...

என்னை
இழுத்துச் செல்லும் முறைக்காய்
நடுங்கி நான் காத்திருக்கையில்
வீசப்படும் என் உடலை
தின்னவரும் கழுகுகளாய்
திடீரென வானில்
காகக் கூட்டம் பறந்து
என்னை மீண்டும் பயமுறுத்தலாம்...

பெற்றோல் ஆவி நிறைந்த
சொப்பிங் பைகளும்
மீண்டும்
என் முகத்தை மூடலாம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் நான் போக வேண்டும்
எனக்காக அழுது கொண்டிருக்கும்
உள்ளங்களைப் பார்க்க வேண்டும்

உங்கள் பார்வை
எனக்கு புரிகிறது

உங்கள் ஏக்கங்களும்
எனக்கு விளங்குகிறது
என்னால் என்ன செய்ய முடியும்......?

முடிந்தால்
போய்ச் சொல்கிறேன்
நான்
வ ரு கி றே ன் .

□ □

*சரிநிகர் 1994 டிசம்பர் 08—21.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் இரவில்......

அ. குமணன்
1994

இது
கொலை விழும் நேரம்
உயிரை யாசி!

மனித அலறல்களால்
மென்மை விழிகளுக்குள்
கோரக்கனவுகளை
கொட்டும் ராத்திரி
சுதந்திரத்தை சுருட்டிவை!

தள்ளிப் போகும் நிழல் உருவங்கள்
ஈன உயிர்கள்
அடிமைகளாய்
இருட்டுக்குள் முடங்கிக்கிடக்கும்!

எங்கேயோ
தூரத்தில் அமைதி கிழியும்
துப்பாக்கி வேட்டுகள்
ஞாபகங்கொள் !
மடிந்து வீழும்
மனிதாபிமானத்தை!

காதுகளை பொத்தி படு!
தெரு மூலையில்
அவலங்கள்
கதறி அழுகின்றன!

□ □

*தினகரன் 1994 ஒக்டோபர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விட்டுவிட்ட அவளை விட்டு

அ. குமணன்
*1993*

வாழ்வின்
சோகச்சிறையில்
இனி இல்லை நான்.

கன்னத்தில்
முளைத்து செழித்து
மண்டிக்கிடந்த தாடியை
களையெடுத்தாயிற்று!

காகிதத்துள்
ஞாபகமாய் இருந்தவளே
உன்னை – தீ கங்குகளால்
கரியாக்கி அழுவதைத் தவிர
வேறு வழியில்லை

கனவுகளின் கூச்சலால்
மலட்டு தூக்கத்துடன்
மல்லுக்கட்டிய என் விழிகள்
இனி ராவுகளுக்குள்
நிம்மதியுடன் தொலைந்து போகும்

இத்தனை நாளாய்
உன் மனசுக்குள்
இறந்து கிடந்தவன்
உயிர்த்தெழுகிறான்
உன்னை மறந்து.

□ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த மரம்!

அ. குமணன்
1994

அந்த உயிர்
விருட்ச நாமம்
உறைந்த கர்ப்பத்தில்
உறங்கி
பூமியுள் புதைந்து கிடந்தது

ஒரு நாள்
கரு உடைத்து
மண் சிதற்றி
வான் முட்டி விரிய
இயற்கை எழுதும்
பருவ விதி!

துளிர்க்கும் போது
சிதைக்க வந்த
எருமைகளுக்கே
ஒதுங்கிக்கிடக்க
நிழல் பரப்பும்!

காலச் சுழற்சியில்
இரக்கமில்லாமல்
இலைகள் தண்டிக்கப் படுவதும்
ஒட்டப் படுவதுமாய்
உருக்குலைந்து
மாறி மாறி நகருமது
மானுட வாழ்வு போல்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதிர்ந்து வீழும் இலைகள்
உதிரக் கடன் அடைக்க
உக்கி......! உக்கி......!
மண்ணை உரமேற்றும்
நன்றியைப் பார் !

இயற்கையின் வெறிமோகம்
மரத்தை வீழ்த்த
சூழ்ச்சி செய்து
சுழன்றடித்த பேய்க்காற்று
முடித்துக் கொண்டது யாகம் !

ஒரு காட்டு மனிதனின்
வறுமை எரிக்க
விறகுகளாய் கிளைகள்
விலை பேசப்பட்ட தியாகம் நினை !

அதோ.... !
கறையான் மண் கூடு
பாதத்தில் படர்ந்து...
தின்று அழித்தாலும்
இன்னமும்
ஊன்றிய நம்பிக்கையுடன்

மனிதனே நீ......?

□ □

***தினகரன் 1994 யூலை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலை கூவு!

அ. குமணன்
*1994*

தோளை அடக்கிய
கோழைத்தன ஆணிகளை உடை!
வீரம் ஊற்றி
வேட்கையை சுண்டு!
விழித்தெழு!
நிமிர்ந்து புறப்படு!

எத்தனை நாட்களுக்கு
விலங்குகள் பூட்டிய ராவுகளில்
உணர்வுகளுக்குள்
நஞ்சினை திணித்து
உறக்கமில்லாமல்
செத்துத்தொலைப்பது!

சுருட்டிவைத்த
சுதந்திரத்தை எடுத்து
விரித்துப்போடு!
அடிமைத்தரித்திரங்களை
அரிந்து விட்டு
விழுமியங்களை படரவிடு!

அட்டூழியங்களை சுமந்து
மடியவைத்தாயே மானத்தை
ஊமையாய் சோகங்களை
சுமந்து ஊனமானாயே

எழுந்து நில்!
சுதந்திரத்தை சுவாசி!
பிறப்பின்வரம் சுயம் பெறு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவி மனிதா
வாழ்க்கையின்
கழுத்தில் வந்து வீழ்ந்த
அடிமைச்சுருக்கில்
அவஸ்தைப்படுவதுதான்
உன் தலைவிதியா ?

மனிதாபிமானத்தை
மறந்து விட்டு
சுகம் விசாரிக்க
துப்பாக்கிகளை
தூதனுப்பினார்கள் துரோகிகள்
வெஞ்சமரில் தான் விடியலா ?
சிலிர்த்தெழுந்து
உரக்கக்கூவு — நாளை
சிவந்து விடியட்டும் !

□ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தெருக்களில்........

அ. குமணன்
*1994*

சோகம் ஊற்றி
மேற்கின் கதவுகள் உடைய
தொலை தூரத்தால்
விடியல் தொலையும் நேரம் !

வான முகத்தில்
வடிந்து கவியும் இருளை
தூண்களில் பூத்த வெளிச்சப்பூக்கள்
துரத்த முயன்று
தோற்றுப் போயின.

இது
மயான இரவு
நாய்களின் குரைப்புகளால்
நடுக்கங்கள் மனித உடல்களை
கவ்விக் கொள்ளும்

துப்பாக்கிகளின்
வெடி அதிர்வில்
இந்த ராவில்
சுதந்திரம்
குழி தோண்டி
புதைக்கப் பட்டது !

நாளை
மரண விடியலில் விழித்தெழுவோம்
எங்கள் சகோதரர்கள்
தெருக்களில்
மடிந்து கிடப்பார்கள் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்நாள் எந்(ன்)நாளோ......!

எஸ். எஸ். ராஜன்
*1994*

என் நிலையை மறந்து
உன் வரவை நினைத்து
ஏங்கி நிற்கின்றேன்
நாட்களை எண்ணி !

கனாப் படங்களில்
ஒவ்வொரிரவும்
கட்டியணைத்து
கன்னத்தில் பொழியும்
முத்த மழையில் நனைந்து
வாரங்களை நகர்த்தி !

கைத்தலம் பற்ற
காரிகை பார்க்கும்
அன்னையின் பேச்சை
கண்ணியமாய் திருப்பி
உன்தலம் சேர
மாதங்களை துரத்தி !

வேலையின் வேளையில்
உன் லீலைகள்
என்னை
சோதனை செய்ததால்
பட்டிகள் கழட்டி
பதவிகள் குறைந்து
தேய்பிறையானேன்
கட்டிலைக் காத்து !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்களின்
அவலங்கள் தீர்ந்து
சனங்களே
ஒன்றாகும் போது
ஏன்
நம் மனங்கள் மட்டும்
பிணங்களாய் இன்று?

என் உடலில்
மூச்சு
இருக்கும் வரை
காத்திருப்பேன்
நம்
இரு மனங்களின்
திருமணத்தைப் பார்த்து......!

□ □

*தினமுரசு 1995 ஜனவரி 22—28*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இளையவனுக்கு......!

எஸ். எஸ். ராஜன்
*1995*

நினை......
நடந்ததை மட்டுமல்ல
இனியும் நடப்பதையும்
நினை......
வெறித்த தேசத்தில்
எமது விலாசங்கள்
பொறிக்கப்படும் வரை
நினை......

விதியின் சதுரங்கத்தில்
நாமும் நகரும் போது
வேதனை
வந்தாலென்ன......
வெறுப்புச்சொல்லி
விடப்போவதில்லை
நினை......

மெய் இது
பொய்யென்றேன்
ஏற்க மறுத்தாய்......
புத்தரின் தத்துவத்தை
நித்தமும் போதித்தேன்
பேச்சை முடித்தாய்......
நீர்க்குமிழி வாழ்க்கையை
நீ புரிந்து
நீர்த்துளிகள் சொரியும் போது
ஒரு தரம்
நினை......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையின் விதைகள்
முளைத்திடும் போது
நோண்டிட வைத்திருக்கும்
பொய் நகங்கள்
புதைக்கப்படும்,
வழியில் என் கண்கள்
உனை நோக்கும்
உன் கண்கள்
மண் நோக்கும்
நினை......

வேதனையை சுமக்காதே
அவை நீரல்ல
வியர்ப்பதற்கு
உண்மைகளை மறுக்காதே
அவை வேம்பல்ல
கசப்பதற்கு
விழித்து நடக்க
வழிகாட்டும் பூமி
மடிந்து விழுந்தால்
மடி தாங்கும் வரை
நிகழ்வுகளை
நினை.....

□ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுகள்......

**எஸ். எஸ். ராஜன்**
*1994*

வானத்து வெளியில்
அண்ணார்ந்து பார்த்தேன்
எண்ணங்கள்
என்னிடமில்லை

நினைவுகள் – நிகழ்ந்த
நிகழ்வுகளில் நிலைத்திருக்க
நான் மட்டும்
புல் வெளியில்
படுத்திருந்தேன்.

நினைத்தது நானில்லை
நிகழ்வுகளை நினைவுகள்
நினைத்ததற்கு
நிழல்தான் சாட்சி.

அதே ஆகாயம்......
அதே மேகம்......
இதே பூமியில் – அன்று
எங்கள் இன்ப ரதங்கள்
பவனிவரும் போது
காட்சியளித்த சாட்சியங்கள்

இன்று
அந்த ரதங்கள்
ஓடிவரும் பாதையில்
கிடையாக தடை செய்யும்
எத்தனை இன்னல்கள்......!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பங்களின் தரிப்பிடங்கள்
இல்லங்களில் இருப்பிடமானபோது
வேடிக்கையில் வீதியில்
திளைத்திருந்தோம்.

ஆனால் இன்று......
சமாதான வாகனம்
வலம் வருவதால் மட்டும்
பிழைத்திருக்கின்றோம்
இல்லையேல்
....................?

பார்வைகள்
உள் நோக்கும் போது
சமாதானம்......
வெள்ளோட்டம் மட்டும்தான்
பைகளுக்குள் உறங்கியிருக்கும்
வாள்கள் விழித்துக்கொண்டால்
வெள்ளோட்ட வீதியில்
குருதிகள் குடிகொள்ளும்
நாளைய நிகழ்வுகளை
நாடறியச் செய்யும்

நினைத்தது நானில்லை
நிகழ்வுகளை நினைவுகள்
நினைத்ததிற்கு
நிழல்தான் சாட்சி.

□ □

*தினமுரசு ஏப்பிரல் 16—22*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனச் சேதிகள்

எஸ். எஸ். ராஜன்
*1994*

இரவு
ஆட்சி புரியும்
கண்களின் கதவுகள்
மூடிக்கொள்ளும்.
தடுத்தும் முடியாமல்
நினைவின் அலைகள்
மனப்பாறையில்
மோதிக்கொள்ளும்,

உறக்கத்தை
ஓரம் கட்டிவிட்டு
உதிர்ந்த உறவுகளில்
நிகழ்வுகளை
வேவு பார்க்க
நினைவு வீரர்கள்
பயணிப்பர்.

கலக்கத்தின் கடலில்
தத்தளிக்க
அக்கரையில் அவன்
அக்கறையின்றி
ஆடவனின் அரவணைப்பில்......

சீறிடும் சீற்றங்கள்
அவளை
தீண்டிட நாடிய போது
தடைக்கல்லாய்
என் சிரிப்பு......!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியிடையின்
மடியினிலே
தொட்டிலிட்ட என்னையே
விட்டுவிட்டாள்.

கோடைகால மழைக்குளிருக்கு
போர்வையான
இவன் மட்டும்
விதி விலக்கா......?

மதுவுள்ள மாதென்று
எண்ணியிருந்தேன்
விலைமாதென்று
அறியாதவரை......

புலன் விசாரணை
புலன்களுக்கு
விடை கொடுத்ததால்
புரிந்து கொண்டேன்
''நிலவு திருடிய வானம்
நிரந்தரமானதென்றும்''
நினைவு திருடிய மனம்
நிகழ்தகவானதென்றும்.

□ □


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொரு குரங்குகள்......!

**எஸ். எஸ். ராஜன்**
*1993*

மனங்களை மாற்றி
மடல்களை நீட்டி
காதல் வலை வீசி
கனிவுடன் பணி செய்து
நாடகம் புரிந்திடும்
நடமாடும் இளைய
பச்சோந்திகளைப் பார்க்காதே
அவை ஒவ்வொரு இனமும்
ஒவ்வொரு குரங்குகள்தான்

சாதியென்றும் பேதமென்றும்
சாதனைகள் காட்டி
இனத்தையும் மொழியையும்
இடையிடையே துருவி
துண்டிக்கும் வர்க்கங்கள்
துலங்கிடும்போது
அவற்றினை அடையாதீர்கள்
அதில் ஒவ்வொரு இனமும்
ஒவ்வொரு குரங்குகள்தான்.

பெண்களின் மனங்களை
மென்மையாய் மெச்சிடுவர்
பெண்களின் பின்னால்
பித்தாக அலைந்திடுவர்
பெண்மையின் கற்பினில்
வெள்ளோட்டம் பார்த்துவிட்டு
சீர் தூக்க சீதனம் கேட்கும்
சீமான்கள் ஒவ்வொருவரும்
ஒவ்வொரு குரங்குகள்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலில்லை என்றழுது
சோகக்கொடி நடுவர்
பதவிகள் பெற்றுவிட்டு
பந்தக்கரம் நீட்டுவர்
அதிகார வெறிபிடித்து
அரசியலாட்சிக்கு வருவர்
இவர்களையும் நம்பாதீர்கள்
அவர்கள் ஒவ்வொரு இனமும்
ஒவ்வொரு குரங்குகள்தான்.

□ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லையில் எதுவுமில்லை

வி. கமலினி
*1994*

நிலாப்பாவை முகம்பார்க்கிறாள்
நீர்ப்பரப்பில்

எங்கோ திருடிய
குளுமைப் பொதியை
என் முகத்தினில் கொட்டிச் செல்கிறது
திருட்டுத் தென்றல்

இரவு......
இந்த ஏகாந்தம்
என்னை நேசிக்கும்
ஒரேயொரு நிஜம்!

வானம் போட்டிருந்தது
ஒரு
தாரகைக் கோலம்.

புள்ளிகளை
எண்ணிப் பார்த்து...... எண்ணிப் பார்த்து
கணக்குப் பிழைக்க
மீண்டும் எண்ணி
எதையெதையோ எண்ணியபடி நான்

எல்லை காணாமல்
எழுந்து சென்று
கட்டிலில் ஏறி கால்தட்டி
மல்லாந்து படுத்தேன்

என் கண்களுக்குள்
ஏதோ ஒன்று
ஊர்ந்து செல்கிறது.

□ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவிக்கு ஒரு மடல்

வி. கமலினி
*1994*

அன்புள்ள கண்மணிக்கு
அத்தானின் முத்தங்கள்
அரேபிய மண்ணிலிருந்து
அன்புடன் எழுதுகிறேன்.

ஒருவேளை உணவொறுத்து
ஒட்டுமொத்தமாக
ஒரு செக்காய் அனுப்புகிறேன்
ஒறுத்து நீ செலவு செய்.

சித்ரா சொன்னாளென்று
சிபோன் சாறி வாங்கி
சில்லறை ஆக்காதே
சிக்கனத்தை பழகிக்கொள்.

இளைய சகாராவில் நான்
இன்னலோடு வாழ்கிறேன்
இனிமையான மடல் வந்தால்
இதயங்கொஞ்சம் மகிழ்வு பெறும்.

வார்த்தைகளைத் தேடி நீ
வாசனை மைதடவி
வடிவாக எழுதிவிடு
வாஞ்சையோடு நான் படிக்க.

□ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயும் நானும்

**வீ. கமலினி**
*1994*

உயிரைக் கடித்து
உதிரம் குடித்து
கடவாய் வழிய வருகிறது
ஒரு காடேறி

கண்வழியே கணல்
இதயம் வரை சென்று
கரம் வழியே வெளியேறி
கழுத்தை நெரிக்கிறது

மனதை
கறையான் அரித்து
சல்லடையாக்கி
சதிசெய்யச் சொல்கிறது.

முடிவில்......
நீயும் நானும்
விரோதிகள்!
துரோகிகள்!

□ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு ஆத்மாவின் அறிமுகம்

செ. திவாகரன்
*1994*

ஓ .....என் பிரியத்தின் ப்ரியமே
உன் மௌனங்கள்
எனக்கு ஸ்ரீராகங்கள்
அந்த...
இதழ்களின் இளஞ்சிவப்பில்
நான் யுகந்தோறும்
தபசிருப்பேன்......!

உன்–
உதயகாலத்து
புன்னகைப் புஸ்பங்களை
என்
புதுக் கவிதையில்
பூஞ்சரமாய்த் தொடுத்து
அங்கீகாரம் கொடுப்பாயா ?

ஊமையின்
கீர்த்தனங்கள் என்றும்
அபஸ்வரம் ஆகிவிடா
என் மனசில்
என்றும் ஒலிக்கும் சுபராகங்கள்

அடி ஸ்னேகிதி,
ஆர் சொன்னார் உன்னை
ஊமையென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் மௌனங்களில்
திரையிட்டு நர்த்தனம்
–படிக்கும்
அர்த்த புஷ்டியான
அழகிய பல்லவிகளை
புரிந்து கொள்ளும்
சக்தி அவர்களுக்கு
சற்றும் இல்லையடி

நான்– என் வாழ்வில்
உன்னைத்தான்
சகலமுமாய் பிரகடனம்
செய்து விட்டேன்
சத்தியம், நிதர்சனம்

வைகறைப் பொழுதின்
வசீகரப் பூக்களில்
நீதானே நித்தமும்
பூபாளம் பாடுகிறாய்

அந்தி வேளையில்,
சந்திரப்பிறையின்
சதிர் நடையில்
நீதான் நெஞ்சே
வசந்த ராகம்
வாசிக்கின்றாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயில் மறந்த
என் விழிச் சிறைக்குள்
நீதானே நீலாம்பரி பாடி
தட்டிக் கொடுத்து
பதமாக உறங்க
வைக்கிறாய்......!

அன்பே......
என்
ஆத்மாவை அறிமுகம்
செய்கிறேன்
சங்கமம் ஜீவனில்தான்
தேய்ந்து போகும்
தேகங்களில் அல்ல
காமம் மாத்திரம்
காதல் இல்லையடி
கவலைப்படாதே !

□ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதலி......

அ. சியானந்த்
1995

கண்ணுறக்கம்
உன்னை விட்டு விடும்
பெண் மயக்கம்
உன்னில் மொட்டு விடும்
நீ காதலி......

ஊணிலே
உனக்கு வெறுப்பு வரும்
உன்னிலேதான்
உனக்கு பிடிப்பு வரும்
நீ காதலி......

உனக்கும்
புதுக் கவிதைகள்
பிறக்கும்
இருந்தும்
வைரமுத்துவின் வரிகள்தான்
உனக்குச் சொந்தமாகும்
நீ காதலி......

ஒரு பருவில்
உன் முழு முகமே
மறைந்து போகும்
ஒரு சின்னப் பீத்தலில்
உன் உடல் முழுதுமே
தெரிவதாய் தெரியும்
நீ காதலி......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''Fair and Lovely'' யோடு
''Hair Cream'' மும்
முகத்தை மாற்றும்
சைக்கிள் டயரோடு சேர்ந்து
செருப்பும்
தேய்ந்து போகும்
நீ காதலி......

மொட்டைத் தலையும்
Modern
சீப்புக் கேட்கும்
காற்சட்டைப் பைக்குள்ளும்
கைக்குட்டை
தானாய் நுழையும்
நீ காதலி .....

உன் காதல்
ஒரு தலையாய்
ஓய்ந்து போகலாம்
Take it Easy என்றே
உன்னை நீ
தேற்றி நிற்கலாம்
நீ காதலி......

□ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளாத் துயரில் அமிழ்ந்தேனடி!

அ. சியானந்த்
*1992*

கண்ணீர் நதிகள் – என்னுள்
கவலையைத் தேக்கி – என்
கன்னங்கள் தாண்டி
கலைந்து சென்றதேனோ ?

கானங்கள் நான் பாடி
காதலித்திருந்தேன் – அந்த
காதலால் நான் பெற்ற
காயங்களால்தான்.

கிழக்கு வெளுக்குமுன்
கிளிபோல் வந்தவள் – பெருங்
கிளர்ச்சி செய்து – அன்பை
கிழித்துச் சென்றாளே

கீதங்கள் நான் பாடி
கீர்த்தி பெறவில்லைதான் – ஆனாலும்
கீழ்மக்களின் வயிற்றைக்
கீறிப் பிழைத்தவன் இல்லையே

குறும்பு கொண்டவன் தான் – ஆனாலும்
குரோதங் கொண்டவனில்லையே!
குதூகலித்திருந்தேன் தான் – மலரும்
குறிக்கோளை மறந்தில்லையே.

கூப்பிட்டு விட்டு – இன்று
கூறாமல் சென்றதேனோ ?
கூட வருவேன் என்றவள் – இன்று
கூராய்க் குத்தியதேனோ ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டது என்னால் தானென்றால்
கெட்டியாய்ச் சொல்லிவிடு
கெஞ்சி நிற்கும் எனக்கு மட்டும்
கெடுதி ஏன் செய்தாய்?

கேட்கை பல கேட்டு
கேடு செய்தாய், தாங்கினேன் – ஆனால்
கேலி செய்து – என்னைக்
கேவலப் படுத்தி விட்டாயே!

கையோடு நான் வருவேன்
கைலாயம் தான் சென்றாலும் – என்று
கையடித்துக் கொடுத்து விட்டு – இன்று
கைகழுவிச் சென்றதேனோ?

கொஞ்சும் மொழி பேசி
கொண்டாட்டம் செய்தபின்
கொடுமை எண்ணத்தோடு – என்னை
கொட்டி விட்டதேனோ?

கோடு போட்டு அடைத்ததில்லை
கோபங் கொண்டும் அழைத்ததில்லை
கோபித்து ஏன் பறந்தாய்?
கோலத்தை ஏன் கலைத்தாய்?

கௌரவமாய் வாழ நினைத்து
கௌரிகை உனை அழைத்தேன்
கௌதமி போலிருந்து – பின்
கௌதாரி போல் பறந்ததென்ன?

□ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ● நன்றிக்குரிய நண்பர்கள்

கோகிலராஜா – கே
புனிதன் – எஸ்
புவனேந்திரன் – எம்
ஈஸ்வரன் – ஜி
சுவேந்திரராஜா – எம்
மகேந்திரன் – எம்
அழகுராஜா – வி
கிருபைநாயகம் – கே
தியாகராஜா – கே
இளங்கோ – ரி

---

குறிப்பு:- *31ம் பக்கத்தில் உள்ள "மனச்சேதிகள்" கவிதையின் பிரசுரமான திகதி தவறுதலாய் 30ம் பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ளது.*

*நவதர்சிகள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனையில்..........

உங்கள் அச்சு வேலைகளை
காலத்திற்கேற்ப
சிறந்தமுறையில்
குறித்த நேரத்தில்
குறைந்த செலவில்
செய்துகொள்ள
நாடவேண்டிய
ஒரே இடம்

ஆனந்தா
அச்சகம்

அம்மன் கோயில் வீதி,
கல்முனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவதர்சிகளே! சுமைகள் உங்களுக்கு கவிதைகளாகியிருக்கின்றன. சிலருக்கு கவிதைகளே சுமைகளாகிவிடும் காலத்தில்.

தமிழ் நாட்டின் ஜனரஞ்சக கவிதைத் தீனியும் உங்களில் சிலரில் கலந்து போய் உள்ளது.

ஆனால் நவதர்சிகளே! நவீன கவிதை என்பது சாதாரண சொற்களைக் கொண்ட நேரடி அமைப்பு என்பதை நீங்களே இங்கு நிரூபித்திருக்கிறீர்கள்.

எளிமையான சொற்களை நேரடித்தன்மை மிக்கதான கவிதைகளில் கையாளுதல் கத்திவிளிம்பில் நடப்பது போன்றதாகும். எளிமையான சொற்களுக்கு வலுவைக் கொடுப்பது கவிதையின் இறுக்கமான அமைப்பே.

— கவிஞர் சண்முகம் சிவலிங்கம் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org